# அண்ணாமலை பல்கலைக்கழகம்

பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள இரட்டைக்குளம் மற்றும் சிறுவர் பூங்கா அருகில் உள்ள குளம் இவைகளை பாதுகாத்து பராமரித்து மீன் மற்றும் தேங்காய் மகசூல் செய்வதற்கான வருட குத்தகை கீழ்கண்ட நிபந்தனைகளுடன் கோரப்படுகின்றது.

1. குளங்களையும் சுற்றியுள்ள வேலி மற்றும் மரங்களையும் தற்போது உள்ள நிலையிலேயே குத்தகை கால முடிவில் ஒப்படைக்க வேண்டும்.
2. தேவையானபோது மீன் பிடிக்கவோ, மீன்களை குளத்தில் விடவோ, தேங்காய்களை பறித்துக்கொள்ளவோ அனுமதிக்கப்படுகின்றது.
3. குளங்களை தங்கள் செலவில் பாதுகாத்து பராமரித்துக்கொள்ள வேண்டும்.
4. எக்காரணத்தைக்கொண்டும் குளத்திலிருந்து நீரை வெளியேற்றக்கூடாது.
5. பரங்கிப்பேட்டையில் இயங்கும் பல்கலைக்கழக கடல்வாழ் உயிரின புலத்தின் ஆலோசனைப் பெற்று மீன் வளர்ப்பு மற்றும் குளங்களை பராமரிக்க வேண்டும். அப்புலத்தின் இளங்கலை, முதுகலை மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் தங்கள் படிப்பு சம்பந்தமாக மீன் வளர்ப்பிற்கு எந்தவித குந்தகமும் இன்றி குளங்களை பயன்படுத்திக்கொள்வார்கள்.
6. குளத்தில் அங்கக (Organic), அனங்கக (In-organic), இடும் இடுபொருள்கள் சுற்றுச்சூழலக்கு எவ்வித குந்தகமும் விளைவிக்கக்கூடாது.
7. குளங்களைத் தவிர பிற இடங்களை உபயோகிக்கக்கூடாது.
8. குத்தகை விடப்பட்ட எல்லைக்குள் எந்தவித கட்டுமான வேலைகளை செய்யக்கூடாது.
9. மின்சார இணைப்பு இது சம்பந்தமாக பல்கலைக்கழகத்திலிருந்து தரப்படமாட்டாது.
10. பல்கலைக்கழக அனுமதியில்லாமல் உள்குத்தகை பிறருக்கு விட அனுமதி இல்லை.
11. மேற்கூறிய எந்த நிபந்தனைகளை மீறினாலும், பல்கலைக்கழக நலனுக்கு குந்தகம் விளைவிக்கும் விதமாக நடந்துகொண்டாலும், குத்தகை ஒப்பந்தம் எந்தவித முன் அறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.
12. குத்தகை விருப்ப மனுவை எந்தவித காரணமின்றி ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ பல்கலைக்கழக பதிவாளர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.
13. குத்தகை காலம் 3 ஆண்டுகள். இரண்டாம் ஆண்டு, முதலாம் ஆண்டு தொகையிலிருந்து 10% கூடுதலாகவும், மூன்றாம் ஆண்டு இரண்டாம் ஆண்டின் குத்தகை தொகையிலிருந்து 10% கூடுதலாக வசூலிக்கப்படும். மூன்றாண்டிற்கான மொத்த குத்தகை தொகையையும் ஒப்பந்த கால தொடக்கத்திலேயே முழுமையாக செலுத்தவேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு குத்தகை எடுக்க விருப்பமுள்ளவர்கள் எதிர்வரும் ஆகஸ்டு 17ஆம் தேதி மதியம் 12 மணிக்குள் தங்கள் குத்தகைத் தொகையுடன் கூடிய விருப்ப மனுவை ஒட்டப்பட்ட உரையில் பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறது.

11/8/2020

பதிவாளர் (பொ)